## தேயிலை சக்தி நிதியம் - 2015

தேயிலை சக்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேயிலை சக்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதியத்தை மீளமைக்கும் செயற்பாடொன்றிற்கு தொடர்புபடுத்தப்படல்

கடந்த 5 ஆண்டுகளில் நிதியத்தின் நிதி விளைவுகளை கருத்திற் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டு தவிர ஏனைய ஆண்டுகளில் தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிருந்தன. 2005 ஆம் ஆண்டிற்கு முன்னர் திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 437.5 மில்லியனான மூலதன மானியம் 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு முரணாக வருடாந்தம் 10 சதவீதம் வருமானத்திற்கு சீராக்கப்பட்டமையால் நட்ட நிலைமையை குறைத்து காண்பிப்பதற்கு காரணமாக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது ரூபா 25.55 மில்லியனான அரசிடமிருந்து கிடைத்த மானியங்களும் விரிவான வருமானக் கூற்றில் சீராக்கப்பட்டமையால் மேற்படி நட்ட நிலைமையை மீளாய்வாண்டின் போதும் தொடர்ந்தும் குறைத்துக் காண்பிப்பதற்கு காரணமாக இருந்தது. மேலும் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 74 மில்லியன் வருமானத்திற்கு எடுக்கப்பட்டமையால் 2012 ஆம் ஆண்டின் போது இலாப தன்மையான நிலைமையொன்றினைக் காண்பித்திருந்தது.

2011 ஆம் ஆண்டின் போது ரூபா 553.04 மில்லியனான நிதியத்தின் தேறிய சொத்துக்கள் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 72.42 மில்லியனான தேறிய பொறுப்பு நிலைமையொன்றாக மாறியிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அது 111.65 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே நிதியத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் 2016 யூலை அளவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், நிதியத்தை மீளமைக்கும் செயற்பாடொன்றிற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 10

நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட திகதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தொன்றின் நியாயமான பெறுமதி அதன் முகப்பெறுமதியுடன் பொருண்மையான அளவில் வேறுபடும் போது மேலும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் நிலையான சொத்துக்கள் 2006 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தினால் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், முதலீட்டு வட்டி, காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 777,940 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களின் பிரகாரம் தேயிலை செய்கையின் பயனுள்ள ஆயுட்காலம் 33 ஆண்டுகளாக இருந்த போதிலும், கணக்கீடு செய்யும் போது அது 10 ஆண்டுகளாக கருதப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்திற்குச் சொந்தமான தேயிலைச் செய்கை தொடர்பான காலக்கழிவு ரூபா 599,775 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் இயந்திரங்கள் மற்றும் பொருத்திகளுக்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 518,627 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) யட்டினுவர தொழிற்சாலை குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அத்தொழிற்சாலையின் நிர்மாணப் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதியத்திற்கு சட்டரீதியான உரித்தில்லாத 9 வாகனங்கள் தொடர்பாக நிதியம் செலவிட்டிருந்த ரூபா 8,512,921 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

இரண்டு வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கி கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்கும் போது காசேட்டின் மீதிக்கும் பேரேட்டுக் கணக்கு மீதிகளுக்கிடையே ரூபா 96,449 கூட்டுத்தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், அவ்வேறுபாடுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 119,848,226 தொகையான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 34,900,729 தொகையான வியாபார மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பான விரிவான பட்டோலைகளும் மீதி உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டின் போது புலத்கொஹுபிட்டிய மற்றும் பொத்துபிட்டிய தேயிலை தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 18,042,351 கூட்டுத்தொகையான முற்பணங்களை மீளாய்வாண்டின் இறுதியளவிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், தொழிற்சாலை நிர்மாணமும் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

(ஆ) யட்டினுவர தொழிற்சாலை கழுபோவிடியன தேயிலை தொழிற்சாலைக் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2005 ஆம் ஆண்டின் போது அதனை நிர்மாணிக்கும் போது தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 10,269,400 முற்பணம் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹினிதும தேயிலை தொழிற்சாலை, கழுபோவிடியன தேயிலை கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் கையளிக்கும் போது நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,661,828 தொகையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2012 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்டு வந்தது.

(ஈ) சிறு தேயிலை தோட்டச் அதிகாரசபையிலிருந்து நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்த தோட்டச் சங்கங்களுக்குரிய 13 வாகனங்களுக்காக ரூபா 2,691,324 தொகையை அறவிடப்பட வேண்டிய தரப்பினரை இனங்காணாமல் பெறவேண்டியதாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

காண்பிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவை | |
| நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதில் கடமை நியமனமொன்று நிரந்தர நியமனமொன்றை நியமிக்கும் வரை கூடியது 03 மாத காலப்பகுதிக்காக இருந்த போதிலும், நிதியத்தின் கணக்காளர் பதவி மற்றும் புத்தகம் கட்டுனர் ஆகிய பதவிகளுக்காக பதில் கடமை அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் முறையே 2012 மற்றும் 2010 ஆம் ஆண்டிலிருந்து நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (இ) திறைசேரி சுற்றறிக்கை | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் மென்பொருட்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2014 ஆம் ஆண்டின் போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிடமிருந்து தொழிற்சாலை இயந்திரங்களை நவீனமயப்படுத்துதற்காக மாத்திரம் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 25,500,000 பணத்தை உரிய செயற்பாட்டிற்கு பயன்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முறையான அதிகாரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 39,232,292 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 127,823,734 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 88,591,442 அதாவது 69 சதவீதமான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் நிர்வாக செலவினம் ரூபா 11,952,188 ஆல் குறைவடைந்தமை மற்றும் அரசிடமிருந்து மானியம் ரூபா 75,550,000 ஐ விரிவான வருமானக் கூற்றில் இணக்கம் செய்யப்பட்டமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு தவிர ஏனைய ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறையொன்றை அடைந்திருந்த போதிலும், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது நிதியத்தின் பங்களிப்பு சாதகமான பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது. எனினும் 2014 ஆம் ஆண்டின் போது பங்களிப்பு கருத்திற் கொள்ளக் கூடியளவு மட்டத்தில் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், மீளாய்வாண்டின் போது மீண்டும் அது 94 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் முறையே 1.1 மற்றும் 0.23 ஆக இருந்தமையால் காணப்பட வேண்டிய நியம மட்டத்தில் அவ்விகிதங்கள் காணப்படவில்லை. மேலும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அவ்விகிதங்களில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.3 நிதியத்திற்கு எதிராக அல்லது நிதியத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தினால் முகாமை செய்யப்படும் 11 கம்பனிகளுக்கு எதிராக நீதிமன்றங்களில் 11 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், நிதியத்தின் விற்பனை பிரிவில் ரூபா 250,019 தொகையான பண மோசடியொன்று தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றும் தொடரப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 19,211,584 தொகையை அறவிடுவது தொடர்பாக வெளிநிறுவனமொன்றுக்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன், 2014 யூன் 20 ஆந் திகதி நிதியத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், பிரதிவாதியால் 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

(இ) நிதியத்திற்கு எதிராக ஊழியர்களால் தொழில் நியாய சபையில் 8 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், ஊழியரொருவரால் மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கொன்றின் தீர்ப்பு நிதியத்திற்கு சாதகமாக வழங்கப்பட்டிருந்த போதிலும், முறைப்பாட்டாளரால் மேன்முறையீட்டு வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

(ஈ) நிதியத்திற்குரிய காணி சிக்கலொன்று தொடர்பில் நிதியத்திற்கு எதிராக மாவட்ட நீதிமன்றங்களில் 2 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2000 இன் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் நோக்கங்கள் பொழிப்பாக கீழே காட்டப்பட்டுள்ளன.

- சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கிடையே சேமிப்பு பழக்கங்களை ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலைமையை கட்டியெழுப்புவதும் தேயிலை கைத்தொழிலுக்குரிய தேவையான முதலீட்டை மேம்படுத்துதலும்.

- தேயிலை தொழிற்சாலைகளை கையேற்றல், அபிவிருத்தி செய்தல், தேயிலைச் தொழிற்சாலைகளின் உற்பத்திக்கு தேவையான ஏனைய வசதிகளை வழங்குதல் மற்றும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் செயற்திறனான உற்பத்திக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

- சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களாக தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களை மேம்படுத்துவதற்காக தேவையான வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதியத்தினால் மீளாய்வாண்டின் போது புதிய நடைமுறைகள் எடுக்கப்படாதிருந்ததுடன், 10 தொழிற்சாலைகள் மற்றும் நிதியத்தின் பங்குதாரர்களின் காப்புறுதி நலன் முறைமை மாத்திரம் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், மேலும் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தொழிற்சாலை இலாபம் / நட்டம்**

---------------------------------------------------------

நிதியத்திற்குச் சொந்தமாக 15 தொழிற்சாலைகள் காணப்பட்டதுடன் அதில் 10 தொழிற்சாலைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது செயற்பாட்டில் காணப்பட்டன. தொழிற்சாலைகள் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அத்தொழிற்சாலைகளின் மூலம் அடைந்த நட்டம் ரூபா 88,770,617 ஆக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 26,712,320 ஆல் அதாவது 23 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்பாட்டு நிலைமையில் காணப்பட்ட தொழிற்சாலைகளினது இலாபம்/ நட்ட நிலைமைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **தொழிற்சாலை** | **திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக** | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| தெனியாய | (11,735) | (11,913) | (7,777) | (7,349) | (4,126) |
| வலகந்துவ | (12,245) | (14,068) | 731 | (2,297) | (3,312) |
| மாவரல | (7,614) | (10,279) | (10,229) | (6,108) | (3,653) |
| எல்பிடிய | (14,675) | (13,482) | (3,409) | (7,990) | (16,604) |
| ரைகம் கோரலை | (13,737) | (15,885) | (7,479) | (7,579) | 2,191 |
| கொத்மலை | (8,092) | (9,683) | (6,933) | (6,132) | (8,901) |
| கெப்பிட்டிபொல | (4,000) | (5,628) | 5,421 | (1,285) | (5,223) |
| பசறை | (1,643) | (1,769) | 5,772 | 6,640 | 2,345 |
| மஹவலி | (4,360) | (10,054) | (13,079) | (899) | 245 |
| தெரணியகல | (10,669) | (22,722) | (8,770) | (3,989) | - |
| | (88,770) | (115,483) | (45,752) | (36,988) | (37,038) |

தொழிற்சாலைகளின் நட்டத்தைக் குறைப்பதற்காக கூடியளவில் கொழுந்தினைக் கொள்வனவு செய்யும் நோக்கில் தேயிலைக் கொழுந்திற்காக அதிக விலை 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்நோக்கங்கள் நிறைவேற்றப்படாமல் காணப்பட்டதுடன் இதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த திரட்டிய கிரயம் ரூபா 73,494,328 ஆக இருந்தது.

(ஆ) தேயிலை உற்பத்தி

தேயிலை உற்பத்தி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு இருந்தன.

| **தொழிற்சாலை** | **ஒரு கிலோ கிராமிற்கான உற்பத்திக் கிரயம் ரூபா** | | **உற்பத்தி** | | **இயந்திர இயலளவு (உற்பத்தி அளவு)** | **உற்பத்திக்கு பயன்படுத்தப் பட்ட தேயிலைக் கொழுந்தின் உற்பத்தி அளவு (நியம சதவீதம் 21.5)** | **ஒரு கிலோ தேயிலையின் தேறிய விற்பனை விலை** |
|---|---|---|---|---|---|---|---|
| | (ரூபா) | | (கி.கி) | | (கி.கி) | % | (ரூபா) |
| | **2014** | **2015** | **2014** | **2015** | | **2015** | **2015** |
| தெனியாய | 527.22 | 498.72 | 146,651 | 115,894 | 451,500 | 20.51 | 373.02 |
| தெரணியகல | 474.62 | 447.46 | 250,966 | 174,912 | 387,000 | 20.94 | 346.96 |
| கொத்மலை | 488.36 | - | 80,351 | 4,837 | 451,500 | - | - |
| பசறை | 382.53 | 349.31 | 209,097 | 309,379 | 387,000 | 22.57 | 326.68 |
| வலகந்துவ | 537.70 | 513.05 | 148,814 | 108,880 | 516,000 | 20.65 | 372.49 |
| கெப்பிட்டிபொல | 391.10 | 360.08 | 206,235 | 270,036 | 387,000 | 21.70 | 324.54 |
| மஹாவலி | 428.92 | 357.36 | 188,065 | 275,144 | 774,000 | 21.82 | 392.23 |
| எல்பிடிய | 565.26 | 447.96 | 102,435 | 159,632 | 516,000 | 20.04 | 327.52 |
| ரைகம் கோரலை | 483.02 | 431.76 | 316,688 | 358,525 | 516,000 | 20.16 | 373.68 |
| மாவரல | 644.51 | - | 55,380 | - | 322,500 | - | - |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடந்த 3 ஆண்டுகளில் நிதியத்திடம் காணப்பட்ட தொழிற்சாலை முறைமையில் இயந்திர இயலளவு விளைவற்ற நிலைமையில் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது 6 தொழிற்சாலைகளில் தேயிலை உற்பத்தி இயலளவில் 50 சதவீதத்தை விட குறைவாக இருந்ததுடன் 3 தொழிற்சாலைகளின் இயலளவு 80 சதவீதம் வரை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் உற்பத்திக் கிரயத்தினுள் பொது மேந்தலைக் கிரயம் காரணமாக ஒரு கிலோ தேயிலையின் உற்பத்திக் கிரயம் உயர்வடைந்திருந்தது.

(ii) மாவரல தேயிலை தொழிற்சாலையில் 2015 ஆம் ஆண்டின் போது உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், கொத்மலை தேயிலை தொழிற்சாலையும் மார்ச் மாதத்திலிருந்து செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை. செயற்பாட்டு நிலைமையில் காணப்பட்ட 8 தொழிற்சாலைகளின் உயர்மட்ட உற்பத்தி மட்டமான 21.5 சதவீதத்தை அடைந்துகொள்வதற்கு 5 தொழிற்சாலைகள் தவறியிருந்ததுடன், அதன் காரணமாக பச்சை தேயிலைக் கொழுந்து அடிப்படையிலான நேர் செலவினம் அதிகரித்திருந்தது.

மேற்படி (i), (ii) இன் பிரகாரம் நிதியத்தின் தொழிற்சாலைகளில் ஒரு கிலோ தேயிலையின் கிரயம், சராசரி தேறிய விற்பனை விலையை விஞ்சியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம் தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை உற்பத்தி பினவருமாறு இருந்தது.

| **தொழிற்சாலை** | **செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட பச்சைத் தேயிலை கொள்வனவு (கிலோ கிராம்)** | **உள்ளவாறான தேயிலை கொள்வனவு (கிலோ கிராம்)** | **செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி (கிலோ கிராம்)** | **உள்ளவாறான தேயிலை உற்பத்தி (கிலோ கிராம்)** | **விலகல் சதவீதம்** |
|---|---|---|---|---|---|
| தெனியாய | 1,200,000 | 565,013 | 258,000 | 115,894 | 55.08 |
| வலஹந்துவ | 1,130,000 | 527,228 | 242,950 | 108,880 | 55.18 |
| மாவரல | 1,016,800 | - | 218,655 | - | - |
| எல்பிடிய | 950,000 | 796,446 | 204,250 | 159,632 | 21.84 |
| ரைகம் கோரளை | 1,800,000 | 1,778,508 | 387,000 | 358,525 | 7.36 |
| தெரணியகல | 1,484,650 | 835,151 | 319,200 | 174,912 | 45.20 |
| கொத்மலை | 1,168,000 | 128,396 | 251,100 | 4,837 | 98.07 |
| கெப்பிட்டிபொல | 1,395,000 | 1,244,335 | 299,925 | 270,036 | 9.96 |
| பசறை | 1,334,500 | 1,370,669 | 287,000 | 309,379 | (7 .8) |
| மஹாவலி | 1,700,000 | 1,261,161 | 365,500 | 275,144 | 24.72 |
| மொத்தம் | 13,178,950 | 8,506,907 | 2,833,580 | 1,777,239 | |

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 13,178,950 கிலோ கிராம் பச்சை தேயிலை கொழுந்து கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 8,506,907 கிலோ கிராம் மாத்திரமாக இருந்தமையால் 35.45 சதவீதம் விலகல் காணப்பட்டது. ஆதலால் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி 2,833,580 கிலோ கிராம் ஆக இருந்த போதிலும் உள்ளவாறான உற்பத்தி 1,777,239 கிலோ கிராம்களாக அதாவது 62.72 சதவீதம் மாத்திரமாக இருந்தது. தொழிற்சாலைகளாக கருதும் போது தெனியாய, வலஹன்துவ, கொத்மலை மற்றும் தெரணியகல தொழிற்சாலைகளில் 25 சதவீதத்திலிருந்து 98 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**(ஈ) உள்நாட்டு தேயிலை விற்பனைப் பிரிவு**

மீளாய்வாண்டின் தேயிலை விற்பனை பிரிவில் ரூபா 9,286,555 ஆன தேயிலை விற்பனையொன்றைக் அடைவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உள்ளவாறான விற்பனை 3,713,253 ஆக இருந்ததுடன், அது இலக்கிடப்பட்ட அளவில் 40 சதவீதமாக இருந்தது.

**(உ) பசளைப் பிரிவு**

மீளாய்வாண்டின் இலக்கிடப்பட்ட பசளை விற்பனை 3,827 மெற்றிக் தொன்னாக இருந்த போதிலும், உள்ளவாறான விற்பனை 679 மெற்றிக் தொன் அதாவது 17 சதவீதம் மாத்திரமாக இருந்தது. எவ்வாறாயினும் முன்னைய ஆண்டின் இலக்கிடப்பட்ட பசளை விற்பனை 8,525 மெற்றிக் தொன்னாக இருந்த போதும் அதில் 16.89 சதவீதம் அதாவது 1,440 மெற்றிக் தொன் விற்பனை நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இலக்கினை நிர்ணயிக்கையிலும் செயன்முன்னேற்றத்திலும் பின்னடைவு ஏற்பட்டிருந்தது.

**(ஊ) நலனோம்பல் பிரிவு**

தேயிலை சக்தி நிதியத்தின் மூலம் பராமரிக்கப்படும் சிறு தேயிலை தோட்ட சங்க அங்கத்தவர்களின் நலன்புரி நிதியத்திலிருந்து தேயிலை சக்தி தொழிற்சாலைகளில் காணப்படும் நிதித் தேவைப்பாட்டை நிறைவு செய்வதற்காக 2000 ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 118,300,000 கடன்தொகையொன்று தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், தொழிற்சாலைகளினால் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அக்கடன் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இக்கடன் தொகை தொடர்பாக மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட வட்டி வருமானம் ரூபா 16,244,777 ஆக இருந்த போதிலும், தொழிற்சாலைப் பிரிவு தொடர்ச்சியான நட்டம் அடைவதன் காரணமாக கடன்தொகை மற்றும் வட்டியைப் பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

(எ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 94,425 பங்குதாரர்களுக்குச் சொந்தமாக ரூபா 206,014,150 பெறுமதியான பங்குகளாக இருந்தன. 2007 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டின் இறுதி வரை பங்கிலாபம் செலுத்தக்கூடிய வகையில் நிதியம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அங்கத்துவ பங்குதரர்களின் பங்கு மூலதனப் பெறுமதியை உயர்வாக வைக்கப்பட்டமையால் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் பொருளாதார சமூக நிலைத்திருத்தலை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடைய சிறந்த நிறுவனமொன்றாக இருத்தல் நிதியத்தின் நோக்கமாக இருந்த போதிலும், மேற்குறித்த விடயங்களின் பிரகாரம் அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

முகாமைத்துவத்தின் பலவீனமான கண்காணிப்பொன்று காணப்பட்டதன் காரணமாக பலாங்கொடை தொழிற்சாலை மூடப்பட்டதன் பின்னர் 6 காணிப் பகுதிகளுக்குரிய 18.59 பேர்ச் அளவிலான காணி வெளித்தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் பலாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவரவல தேயிலைத் தொழிற்சாலைக்குரிய 97 ஏக்கர் அளவிலான காணியில் 47 ஏக்கரில் மாத்திரம் தேயிலை பயிரிடப்படாமலும் அத்தொழிற்சாலைக்குரிய ரூபா 240,000 பெறுமதியான வயல் காணியொன்றும் பயிரிடப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) நிதியத்திற்குரிய பசளை களஞ்சிய வளவில் பசளை கலவை செய்வதற்காக 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 2,197,447 தொகைக்கு பசளை கலவை செய்யும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கலக்கும் செலவினம் மற்றும் அதற்காக எடுக்கும் காலம் கூடிய மட்டத்தில் காணப்பட்டமையால் அவ்வியந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) பலாங்கொடை தொழிற்சாலை மூடப்பட்டதன் பின்னர் கட்டிடங்கள் முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாக தொழிற்சாலைக்குரிய உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் மலசலகூட முறைமை என்பன அழிவடைந்து காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,350,000 பெறுமதியான பலாங்கொடை தொழிற்சாலை அமைந்துள்ள காணியும் ரூபா 10,000,000 பெறுமதியான கட்டிடங்களும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) நிதியத்தின் தலைமை அலுவலகத்தினதும் அனைத்து தொழிற்சாலைகளினதும் திரட்டிய கணக்கினைத் தயாரிப்பதற்காக ரூபா 2,435,000 பெறுமதியான கணனி மென்பொருள் முறைமையொன்று 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்குகளை தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக 2016 திசெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் அது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வலஹந்துவ தேயிலை தொழிற்சாலையின் இயந்திரங்களை திருத்தியமைப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது உதிரிப்பாகங்களைக் கெள்வனவு செய்வதற்கு ரூபா 2,105,980 தொகையும் திருத்த செயற்பாடுகளுக்காக ரூபா 438,819 தொகையுமெ் செலவிடப்பட்டிருந்த போதிலும், அறிக்கைத் திகதி வரையிலும் குறித்த திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு காயவைக்கும் இயந்திரத்தை செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை தேயிலை சபை அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் தெரணியகல தேயிலை தொழிற்சாலையின் ரூபா 3,242,743 பெறுமதியான 7,247 கிலோகிராம் தேயிலை மனிதப் பயன்பாட்டிற்கு பொருத்தமற்றதாக இருந்தமையால் அழிக்கப்பட்டிருந்தது.

(இ) அல்பிட்டிய தேயிலை தொழிற்சாலையில் முறையே ரூபா 1,669,613 மற்றும் ரூபா 1,258,758 பெறுமதியான தேயிலை இருப்பு பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 முறையாக பொறுப்பேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமை**

தொழிற்சாலை கட்டிடங்களின் பெறுமதி ரூபா 81,655,360 எனக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கட்டிடங்கள் அமைந்துள்ள காணியின் உரித்தினை கையேற்பதற்கு நிதியத்தினால் அறிக்கைத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 மனித வள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 90 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 47 ஆகவும் இருந்தமையால் வெற்றிடங்கள் 43 ஆக இருந்ததுடன், அதில் பதவிநிலைத்தர உத்தியோகத்தர்கள் 20 ஆக இருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலைப் பதவியணியினர் 199 ஆகவும் உள்ளபடியான தொழிற்சாலைப் பதவியணியினர் 77 ஆகவும் இருந்தமையால் வெற்றிடங்கள் 122 ஆக இருந்ததுடன், அதில் 19 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அதாவது 53 சதவீதம் வெற்றிடங்களாக காணப்பட்டன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 233 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் வரைவு ஆண்டறிக்கை 2016 திசெம்பர் 20 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

நிதியத்தில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பிரிவிற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தனர்

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

நிதியத்தின் பாதீட்டின் பிரகாரம், பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையே 22 சதவீதம் முதல் 100 சதவீதம் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்குகளைச் சமர்ப்பித்தலில் தாமதம் காணப்பட்டமை. |
| (ஆ) | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் | நீண்டகாலமாக அறவிடுவதற்கும் தீர்வு செய்யப்படாமல் காணப்படும் மீதிகளும் காணப்படல் |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான எண்ணிக்கைக்கு இடையே கருத்திற் கொள்ளக்கூடிய முரண்கள் காணப்படல். |
| (ஈ) | நிதிக் கட்டுப்பாடு | வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை |
| (உ) | தொழிற்சாலை செயற்பாட்டு நிர்வாகம் | அனைத்து தொழிற்சாலைகளும் நட்டத்தை ஈட்டுதல் |
| (ஊ) | சொத்துக்கள் பயன்பாடு | விளைவற்ற சொத்துக்கள் காணப்பட்டமை |